# யோகிராம்
# சுரத்குமார்

என் நினைவினில் வாழும் யோகீஸ்வரன்
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்

தரையினில் வாடும் தாமரையாய்
உருவி கொடியாய் உதிர் பூவாய்
சிதறிய வாழ்க்கை சீரமைத்தாய்
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்

விடியலில் புரள உன் பெயரே
விடிந்ததபின் பார்ப்பது உன் திருவே
சுடுநீர் குளியலில் குருஜெபமே
இவ்விதம் துவங்கும் என் தினமே

குளித்த பின் பூஜை மணிமாடம்
கும்பிட்டுச் சொல்வது உன் நாமம்
உண்கையில் உடுக்கையில் உன் பெயரே
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்

வேலை நேரம் உன் பாதம்
வீற்றிட நெஞ்சுள் உல்லாசம்
கதிரவன் ஏறக் களைப்பாகும்
களைந்திட மருந்தாம் உன் நாமம்

மாலை நெரிசலில் ஆயிரம் பேர்
முகமன் சொல்வது உன் திருப்பேர்

வாழ்த்தவோ வையவோ எவரும் வர
வணங்கி நான் சொல்வது உன்னருள் பேர்

கற்களாய் முட்களாய் பாதையிலே
கவலையாய்க் கடுமையாய்த் தாக்கையிலே
கதறிட வருவது உன் ஜெபமே
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்

ஊரது மூழ்கும் நாடகத்தில்
ஒலி ஒளி காட்சி முன்னிரவில்

சூழ்ந்திடும் தனியே கரும் இருளே - நான்
சுடரென நிற்பேன் உன்னருகே

மறுபடி சோறு குரு நினைவு
தெருநடை ஓரம் பிறை நிலவு

நடந்திடப் பாடும் என் மனசு
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்

வீடது தூங்கும் குயில் கூடாய்
உன்னருள் வீசும் குளிர் காற்றாய்

நாடிய யாவும் நானடைந்த
நிம்மதி சூழ்ந்திடும் இருநிதியாய்

நாளைய வாழ்வும் குருவருளே
யோகி ராம்சுரத்குமார் என்னுடனே

இருந்திடப் பயமேன் என் மனமே
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்